அம்பாறை நகர சபை - 2022

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பாறை நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அம்பாறை நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா என்பதும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) நகர சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 395,642 ஆல் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டு கணக்கின் மூலம் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சரியாகக் கணககீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய வீதவரி மீது வழங்கப்பட்ட ரூபா 203,785 கழிவுத் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் கணக்கில் வழங்கப்பட்ட கழிவை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட ரூபா 519,148 வீதவரி தண்டப்பணத் தொகை வீதவரி வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டு முதல் வீதவரி தண்டப்பணம் ஏனைய வருமானமாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது பொருளிருப்பு மீதி ரூபா 954,010 ஆல் அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பொது பொருளிருப்பு மீதியை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 6,337,045 சம்பளம் மற்றும் படிகளின் மீள்நிரப்பல் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 201,833 நீதிமன்ற தண்டப்பண வருமானத் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய முத்திரைத் தீர்வை வருமானம் ரூபா 7,130,028 ஆல் அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஏ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஓய்வு இல்ல சேவைக் கட்டண வைப்புக்களின் மீதி ரூபா 793,000 ஆல் அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் ஓய்வு இல்ல சேவைக் கட்டண வைப்புக் கணக்கின் மீதியை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஐ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோர் மீதி ரூபா 357,676 ஆல் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டு கணக்கின் மூலம் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஒ) | மீளாய்வாண்டிற்குரிய ஓய்வு இல்லத்தின் ஆரம்ப மற்றும் இறுதி பொருளிருப்பு மீதியை சீர்செய்து விற்பனைக் கிரயம் காட்டப்பட வேண்டிய போதிலும் கொள்வனவுக் கிரயம் குறிப்பிடப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 1,859,335 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஓ) | தொழில்துறைக்கு செலுத்த வேண்டிய மற்றும் பெற வேண்டிய ரூபா 9,426,750 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது ஏடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தத்திற்கும் ஆவணங்கள் மற்றும் பட்டியல்களின் பிரகாரமான மீதிகளின் கூட்டுமொத்தத்திற்கும் இடையில் ரூபா 2,700,480 வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாடுகளுக்கான காரணங்களை ஆராய்ந்து சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சரியான மீதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஓய்வு இல்லத்தின் சீர்செய்யப்பட்ட வியாபாரம் மற்றும் இலாபம் மற்றும் நட்டக் கணக்கின் பிரகாரமான விற்பனை வருமானம் மற்றும் வருமான செலவினக் கணக்கின் பிரகாரமான விற்பனை வருமானம் என்பவற்றிற்கு இடையே ரூபா 1,667,914 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2023 ஆம் ஆண்டு கணக்கின் மூலம் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |

**1.6.3 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 632,062 கடை வாடகை நிலுவைகள் மீளாய்வாண்டில் அங்கீகாரமின்றி நிதிக்கூற்றுக்களில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தன. | ஆரம்ப மீதியை சீர்செய்வதற்காக பதிவழிப்பு மேற்கொள்ளப்பட்டதுடன் அது சீர்செய்யப்படும். | சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 13,522,976 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 4,434,941 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 10,800,000 | 8,872,372 | 6,504,958 | 35,321,768 | 10,750,000 | 8,872,372 | 5,115,656 | 32,954,353 |
| (ii) | வாடகை | 11,528,226 | 8,920,981 | 4,744,811 | 12,175,239 | 11,925,926 | 9,326,366 | 5,104,891 | 10,162,989 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 3,702,000 | 1,635,448 | 1,635,447 | - | 3,402,000 | 1,456,160 | 1,456,160 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 63,528,580 | 41,520,104 | 41,520,104 | - | 49,402,403 | 26,663,920 | 26,663,920 | - |
| (v) | கூட்டுத் தொகை | **89,558,806** | **60,948,905** | **54,405,320** | **47,497,007** | **75,480,329** | **46,318,818** | **38,340,627** | **43,117,342** |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | **வீதவரிகளும் வரிகளும்** | | |
| (அ) | நகர சபைக்கு சொந்தமான 8592 அலகுகள் மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தகவல்களைக் கொண்ட மதிப்பீட்டு அட்டைகள் 2017 முதல் 2022 வரை காலாண்டுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 2023 சனவரியின் மீதி மாத்திரமே நேரடியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | நாளதுவரை நிலுவையாக உள்ள மீதியை சரியாக பெற்றுக்கொள்வதற்கு, 2023 சனவரி தொடர்பான நிலுவை மீதி பெறப்பட்டது. இந்த நிலுவை மீதி தொடர்பான பெறுமதிகள் காலாண்டில் இருந்து காலாண்டு வரை பெறப்பட்டு மீதி சரியாக பதிவு செய்யப்படும். | கணனிமயமாக்கப்பட்ட முறைமையுடன் ஆவணங்கள் நாளதுவரையாக பேணப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள வீதவரியின் மீதி ரூபா 35,321,768 ஆகும். | 2023 ஆம் ஆண்டு முதல் வீதவரி நிலுவைகளை அறவிடுவதற்கான செயல்நடவடிக்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவைகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| | **வாடகை** | | |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடை வாடகை நிலுவை மீதி ரூபா 12,175,239 ஆக இருந்ததுடன் இதில் ரூபா10,479,079 அதாவது 86 சதவீதம் புதுப்பிக்கப்பட்ட பேருந்து நிலையக் கடைகளில் இருந்து பெறப்பட வேண்டியுள்ளது. | 2023 ஆம் ஆண்டு முதல் பெறவேண்டிய பேருந்து நிலையக் கடை வாடகையை அறவிடுவதற்கு செயல்நடவடிக்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகிறது. | நிலுவைகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆண்டு வருடாந்த பொருள் மெய்மையாய்வால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் கணக்காய்வு திகதி வரை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டில் வருடாந்த பொருள் மெய்மையாய்வின் பரிந்துரைகள் எதிர்காலத்தில் அமுல்ப்படுத்தப்படும். | பொருள் மெய்மையாய்வு பரிந்துரைகள் தாமதமின்றி அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | நகர சபைக்கு சொந்தமான 152 கடைகளின் செல்லுபடியாகும் ஒப்பந்த காலம் கடந்திருந்த நிலையில் அதன் ஒப்பந்தங்களை புதுப்பிப்பதற்கு நகர சபை நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை. | இந்த 152 கடைகளுக்கான ஒப்பந்தங்களை புதுப்பிக்குமாறு மாண்புமிகு ஆளுநருக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2005 மதிப்பீட்டின் அடிப்படையில் நகர சபைக்கு சொந்தமான ஆதனங்களுக்கு வீதவரி விதிக்கப்பட்டு வருகிறது. | புதிய மதிப்பீட்டிற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு, விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | வரிகள் மதிப்பீடு செய்யப்பட்டு உரிய காலத்தில் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | நகர சபைக்கு சொந்தமான 142 கடைகளுக்கு அறவிடப்பட்ட வாடகை உரிய காலத்தில் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மதிப்பீடு செய்து சேகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நகர சபைக்கு சொந்தமான 42 காணிகளின் பெறுமதி மற்றும் அந்த காணிகளில் அமைந்துள்ள கட்டிடங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு, கணக்கீடு செய்யப்பட்டு நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | நகர சபைக்கு சொந்தமான ஆதனங்களை மதிப்பிடுவதற்கு மட்டக்களப்பு விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் இதுவரை மதிப்பீட்டு அறிக்கைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி இனங்காணப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் மற்றும் மர தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் ஆகிய ரூபா 192,414,809 நிலையான சொத்துக்களின் வகைப்படுத்தல்களின் கீழ் ஒவ்வொரு உருப்படி தொடர்பான பெறுமதிகள் உள்ளடக்கி தயாரித்து கணக்குகளுடன் சேர்த்து நகர சபையால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நிலையான சொத்துப் பதிவேடு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை பேணப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய பட்டியல்களைத் தயாரித்து சமர்ப்பிப்பதற்கும் நிலையான சொத்துப் பதிவேடுகளை நாளதுவரையாக்குவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு, திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறுமதியை உள்ளடக்கி ஏடுகள் நாளதுவரையாக்கப் பட்டு பேணப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் நகர சபைக்கு நன்கொடைகளாகப் பெறப்பட்ட 71 நூலகப் புத்தகங்கள், நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் காட்சிப் பெட்டி ஆகியவற்றின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டு முதல் சொத்துக்களின் பெறுமதியுடன் கூடிய பதிவேடு பேணப்படும். மேலும் நன்கொடைகளாகப் பெறப்பட்ட பொருட்கள் கணக்கீடு செய்யப்படும். | பெறுமதி இனங்காணப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டு, கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | நகர சபைக்கு சொந்தமான 04 வாகனங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் அந்த வாகனங்களை ஆவணப்படுத்தி கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பெறுமதி இனங்காணப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நகர சபையின் 19 வாகனங்களின் உரிமைத்துவமானது நகர சபையின் பெயருக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிமைமாற்றம் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | நகர சபைக்கு சொந்தமான 12 பழுதுபார்க்க முடியாத வாகனங்களை முறையாக கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வாகனங்கள் முறையாக கைதவிர்ப்பு செய்யப்பட வேண்டும். |

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபையின் செயலாளர் மற்றும் கணக்காளர் உள்ளிட்ட 76 பதவிகள் வெற்றிடமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது, அதில் 43 பதவிகள் அதாவது 58 சதவீத வெற்றிடங்கள் அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மீளாய்வாண்டில் நகர சபை நிதியிலிருந்து ரூபா 17,119,194 சம்பளமாக செலுத்தப்பட்டுள்ளது. | ஊழியர் வெற்றிடங்கள் குறித்து உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களுக்கு நிரந்தர உத்தியோகத்தர்களை கோருவதன் மூலம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். |